2026 பிப்ரவரி மாதம் 18– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 207/2024

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18– ஆம் தேதி புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – வளர்மதி |
| கணவர் பெயர்: | முருகேசன் |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 64 |

18.02.2026

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிருபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 18.10.2024ம் தேதியிட்ட வழக்குரை 1 முதல் 4 இலக்க சொத்துக்களுக்கு வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் சண்முகத்தேவர் பெயரிலுள்ள பட்டா (எண்.1036) | **வா.சா.ஆ.1** | கணினிநகல் |
| 2. | 18.10.2024ம் தேதியிட்ட வழக்குரை 5ம் இலக்க சொத்துக்கு வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் சண்முகத்தேவர் பெயரிலுள்ள பட்டா (எண்.4020) | **வா.சா.ஆ.2** | கணினிநகல் |
| 3. | வழக்குச் சொத்துக்களுக்கான அரசு வழிகாட்டி மதிப்பு | **வா.சா.ஆ.3** | கணினிநகல் |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**:- பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.02.18 18:36:53 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
18.02.2026.